மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

177—

சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***12392—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தென்காசி பதிவு மாவட்டம், கடையநல்லூர் சார்–பதிவாளர் அலுவலகம் தற்போது அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாக இருப்பின், அதனை ஆய்வு செய்து புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் சார்–பதிவாளர் அலுவலகம் பிரிட்டிஷார் ஆட்சியிலே 1890 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 128 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். அந்தச் சார்–பதிவாளர் அலுவலகத்தில் வருடத்திற்கு சராசரியாக 720 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வருவதாகவும் தகவல் தெரிவிக்கின்றனர். தற்போது, அது மிகவும் பழுதடைந்த*

2017 ஜூலை 11]

நிலையிலே, அங்கேயிருக்கக்கூடிய மரங்களெல்லாம் படர்ந்த நிலையில் பறவைகளெல்லாம் உள்ளே சென்று அங்கே record room–ல் இருக்கின்ற ஆவணங்களை எல்லாம் அழிக்கக்கூடிய அளவிற்கு இருக்கின்றது; அங்கே சுகாதாரக்கேடும் இருக்கின்றது. இந்த ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதைப்போல, தரைத்தளம் முழுமையாக நீரூற்று அதிகமாக இருப்பதன் காரணமாக அங்கே அமர முடியாத அளவிற்கு மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றது. எந்த வசதியும் இல்லாமல், இருக்கை வசதி இல்லாமல், சார்–பதிவாளர் அவர்கள் இருக்கைகூட மிகவும் நெருக்கடியான சூழ்நிலையிலே, கணினிகளை எல்லாம் வைக்க முடியாத அளவிற்கு இருக்கின்றது. வாகனங்கள் நிறுத்துவதற்குண்டான இடங்களும் இல்லாத காரணத்தினாலே, அதை முழுமையாக, ஒரு நல்ல கட்டடமாக, மாடிக் கட்டடமாகக் கட்டினால், அனைத்து வசதிகளையும் அங்கே செய்ய முடியும். எனவே, 128 வருட மிகவும் பழமையான அந்தக் கட்டடத்தை முழுமையாகப் புனரமைக்க இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் சார்–பதிவாளர் அலுவலகமானது கடந்த 2016–2017 ஆம் ஆண்டிலே கிட்டத்தட்ட 4,500 பதிவுகளையும், 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் வருவாயையும் ஈட்டித் தந்திருக்கிறது. அதிக வருவாயை ஈட்டித்தரக்கூடிய ஒரு சார்–பதிவாளர் அலுவலகமாக இருக்கின்ற காரணத்தினால், அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். அது பழைய கட்டடம் என்றும், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது என்றும், அங்கே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்றும் உறுப்பினர் அவர்கள் கூறுகிறார். அது traditional building–ஆக இருந்தால், அக்கட்டடத்தின் பழுதினை நீக்கி, சீர்செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கும். அப்படி, அது சரியாக அமையாதபட்சத்தில், புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூலை 11

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். உடனடியாக அந்தக் கட்டடத்தைப் புனரமைக்கக்கூடிய பணிகளை இந்த அரசு செய்ய வேண்டும்.

எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட பண்பொழி சார்-பதிவாளர் அலுவலகம் தற்பொழுது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது. வெளிநாட்டிலே வாழக்கூடிய பொதுநல ஆர்வலர் திரு. ஜமால் முகைதீன் என்பவர் தென்காசி பிரதான சாலையில், பெட்ரோல் பங்க் அருகில் இருக்கக்கூடிய அவருக்குச் சொந்தமான 20 சென்ட் நிலத்தைத் தானமாக அர்ப்பணம் செய்துள்ளார். அர்ப்பணம் செய்து இரண்டு வருடங்களாகியும் உரிய உத்தரவு பிறப்பிக்காததன் காரணமாக அந்த வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. பண்பொழி சார்-பதிவாளர் அலுவலகத்தை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றியமைக்கக்கூடிய ஒரு நடவடிக்கையை, சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்பொழி சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு இடம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அங்கே பத்திரப் பதிவு எவ்வளவு நடைபெறுகிறது என்பதை அறிந்து, அதற்கு எந்த அளவிலே உரிமைகள் வழங்கப்படும் என்பதை ஆய்ந்து, அதற்குத் தேவையான புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

2017 ஜூலை 11]

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பல நல்ல திட்டங்களைத் தந்து, மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தொகுதிக்கும் சேர்த்து நீராபானத்தை அறிமுகப்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைத் திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். உள்ளாட்சித் துறையிலே எங்கள் தொகுதிக்கு நல்ல பல திட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

வால்பாறை தொகுதி, ஆனைமலைப் பேரூராட்சியில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அந்தச் சார்—பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 150 சார்—பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடந்த மாதம்கூட 39 சார்—பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வால்பாறை, ஆனைமலைப் பகுதியிலே அமைந்திருக்கக்கூடிய சார்—பதிவாளர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் என்றால், அது பாதுகாக்கப்பட வேண்டிய கட்டடமாக இருக்கக்கூடும் என்று நினைக்கின்றேன். ஆகவே, அதையும் பழுது நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, புஞ்சை புளியம்பட்டி சார்–பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இதற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சார்–பதிவாளர் அலுவலகத்தினுடைய பத்திரப் பதிவைப் பொறுத்து, அரசுக்கு வருகின்ற வருவாயை முன்னிறுத்தி அதற்குத் தேவையான அளவிற்கு உரிமைகள் அளிக்கப்பட்டு, புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். இந்தக் கூட்டத் தொடரில் உங்களுக்கு இரண்டு மூலக் கேள்விகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். உங்களுக்கு ஏழு துணை வினாக்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். திரும்பவும் நீங்கள் வருத்தப்பட்டீர்கள் என்றால் நான் என்ன செய்யட்டும்? கேள்வி கேட்காத உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். பேசாமல் உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.